# கழுகின் சத்தம்

## நவம்பர் 29, 2023



1

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து


"தேவன் ஒரு அற்புதத்தை செய்து
தேவையானதை தருவதை நீங்கள்
கண்டிருக்க, அவரால் ஒரு
அற்புதத்தை மறுபடியும் செய்ய
முடியாதா என்ன?"
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: கேள்விகளும் பதில்களும், அக்டோபர் 15, 1961 காலை

166. **இயேசு பரி. மத்தேயு 16:9-10 வசனங்களில் கூறினதன் அர்த்தமென்ன? பன்னிரண்டு கூடைகளும் ஏழு கூடை களும் எதற்கு எடுத்துக்காட்டாயுள்ளன? ஞாயிறு காலைக்கு கேள்வி.**

193. மத். 16:10 என்னவென்று நாம் பார்ப்போம், அது என்னவென்று இப்பொ ழுது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அந்த வேதபாகத்தை நான் எடுக்கட்டும். மத். 16:9-10. இதோ உள்ளது:

**இன்னும் நீங்கள் உணரவில்லையா? ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக் குப் பகிர்ந்ததையும், மீதியானதை**

**எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்பதையும்;**

**ஏழு அப்பங்களை நாலாயிரம் பேருக்குப் பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்பதையும் நீங்கள் நினைவுகூராமலிருக் கிறீர்களா?**

(இப்பொழுது கவனியுங்கள், இதற்கு முன்புள்ள சில வசனங்களை வாசிப் போம்)

**இயேசு அவர்களை நோக்கி: பரிசே யர் சதுசேயர் என்பவர்களின் புளித்த மாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார்.**

**நாம் அப்பங்களைக் கொண்டு வராத படியால் இப்படிச் சொல்லுகிறார் என்று அவர்கள் தங்களுக்குள்ளே யோசனை பண்ணிக் கொண்டார்கள்.**

**இயேசு** ... (இப்பொழுது கவனியுங்கள்)... **இயேசு அதை அறிந்து.** (அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து கொண்டார். பாருங்கள்?). **அற்ப விசுவாசிகளே, அப்பங்களைக் கொண்டு வராததைக் குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே யோசனை பண்ணுகிறதென்ன?**

**இன்னும் நீங்கள் உணரவில்லையா? ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடை நிறைய எடுத்தீர்கள் என்பதையும்;**

194. வேறு விதமாகக் கூறுவோமானால்: "தேவன் ஒரு அற்புதத்தை செய்து தேவையானதை தருவதை நீங்கள் கண்டிருக்க, அவரால் ஒரு அற்புதத்தை மறுபடியும் செய்ய முடியாதா என்ன?" பாருங்கள்?... இதை வேறு விதமாக இவ்விதம் கூறலாம்: அவர் உங்களை பாவ

வாழ்க்கையிலிருந்து இரட்சித்திருக்க உங்கள் சரீரத்தை அவரால் சுகமாக்க முடியாதா என்ன? நீங்கள் பாவியாயிருந்த போது, நீங்கள் விசுவாசிக்கத்தக்கதாக உங்கள் ஆத்துமாவை எவ்வளவாக விசுவாச நிலைக்கு உயர்த்தினார் என்பதை நினைவுகூராமலிருக்கிறீர்களா? அவர் அப்படிப்பட்ட மகத்தான ஒன்றை உங்களுக்கு மறுபடியும் செய்ய முடியாதா என்ன? அவர் அற்புதத்தை அல்லது வேறெதாவதொன்றை உங்களுக்கு செய்ய முடியாதா என்ன? ஐந்து கூடைகள்... நினைவுகூருங்கள் என்றார்.

195. உதாரணமாக.... அவர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்த போது, தேவன் சிவந்த சமுத்திரத்தை பிளந்து. வழியை உண்டாக்கி, அதன் வழியாக அவர்கள் நடந்து போகும்படி செய்தார். ஆனால் அவர்களுக்கு தண்ணீர் கிடைக்காத மாத்திரத்தில், அவர்கள் முறுமுறுத்தனர். அது சரியா? அவர்களுக்கு அப்பம்

கிடைக்காத மாத்திரத்தில், அவர்கள், "எங்களுக்கு அப்பம் இல்லை என்று கூச்சலிட்டனர். பாருங்கள்? “சிவந்த சமுத்திரத்தில் நடந்த அற்புதத்தை நீங்கள் உணரவில்லையா? அதன் வழியாக நீங்கள் வரவில்லையா?' என்று மோசே கேட்டான். அவர்கள் சிவந்த சமுத்திரத்தின் அருகில் கடினமான சூழ்நிலையில் சிக்கிக் கொண்டபோது, "ஓ, நாங்கள் அங்கேயே செத்திருக்க வேண்டும். எகிப்தியர் எங்களைத் துரத்திக் கொண்டு வருகிறார்கள். நாங்கள் என்ன செய்வோம்?" என்று அவர்கள் கூச்சலிட்டனர்.

196. அப்பொழுது மோசே, 'பூமியை அங்கே வாதைகளால் வாதித்தவர் யார்? கோசேனில் சூரியன் பிரகாசிக்கும்படி செய்தவர் யார்? என்று கேட்டான். பாருங்கள். அவைகளை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். தேவன் தேவனாயிருக்கிறார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். அல்லேலூயா! அவர் இன்னும்

தேவனாயிருக்கிறார், அவர் நிச்சயமாக எதையும் செய்ய முடியும்.



# புறா



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: பனிவெண்புறா சிறகுகள் மேல், நவம்பர் 28, 1965

44. புறா மிகவும் வினோதமாக உண்டாக்கப்பட்ட ஒரு பறவை. அதன் பழக்கம் என்னவெனில், அதனால் அசுத்தமான எதையுமே தின்ன முடியாது. அதனால் முடியவே முடியாது. ஏனெனில் அதற்காக அது உண்டாக்கப்படவில்லை.

45, புறா தேவனுக்கு அடையாளமா யுள்ளதென்றும், காகம் மாய்மாலக்கார னுக்கு அடையாளமாயுள்ளதென்றும் நான் அடிக்கடி கூறி வந்திருக்கிறேன். ஒரு காகம் செத்து அழுகிப் போன பிணத்தின் மீது உட்கார்ந்து கொண்டு நாள் முழுவதும் அதை தின்று விட்டு. வயலுக்கு பறந்து சென்று புறாவுடன் கோதுமையைத் தின்ன

முடியும். புறா கோதுமையைத் தின்ன முடியும், ஆனால் செத்த பிணத்தை தின்ன முடியாது பாருங்கள்? அதனால் முடியவே முடியாது. அதன் வயிற்றுக்குள் அதை செலுத்த முடியாது. அதனால் ஏன் அப்படி செய்ய முடியாது என்ற நான் வியந்த துண்டு. இரண்டுமே ஆகாயத்துப் பறவை கள். அப்படியிருக்க ஏன்? அவைகளின் உடலமைப்பிலுள்ள வித்தியாசமே இதற்கு காரணம்.

46. அப்படித்தான் ஒரு உண்மையான கிறிஸ்தவனும் இருக்கிறான். ஒரு ஸ்தா பனக் கிறிஸ்தவன் எதை வேண்டுமானா லும் ஏற்றுக் கொள்வான், ஆனால் உண்மை யான, மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனோ உலகத்தின் காரியங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. அவன் வித்தியாசமாக உண்டாக் கப்பட்டிருக்கிறான்'

47, புறாவுக்கு பித்த நீர் கிடையாதென்று அறிந்து கொண்டேன். புறாவுக்குள் பித்த நீர் கிடையாது. ஏனெனில் அது அதற்கு அவசியமில்லை.

48. அவ்வாறே ஒரு கிறிஸ்தவனும் இருக்கிறான், அவனுக்கு எந்த விதமான கசப்பும் அவசியமில்லை. பாருங்கள். ஏனெனில் அவனால் தேவனுடைய ஆகாரத்தை மாத்திரமே உண்ணமுடியும், அதை ஜீரணிக்க கசப்பு அவசியமில்லை. அதற்கு அன்பு அவசியம், பாருங்கள், எனவே அவன்.... அந்த ஆகாரத்தை ஜீரணிக்க அவர்கள் 'ஓ' என்றும் " நல்லது.... என்றும் கூறி அதனுடன் கருத்து வேற்றுமை கொண்டுள்ளனர். ஆனால் அன்பு எப்பொழுதுமே தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்கிறது.

49. இப்பொழுது, அதற்கு பித்த நீர் கிடையாது. எனவே அதனால் முடியாது... கெட்டுப் போன எதையுமே தின்பதென்பது அதன் தன்மைக்கு விரோதமானது. அது தின்று விட்டால், அந்த ஆகாரம் அதைக் கொன்று விடும். ஆனால் அத்தகைய ஆபத்து எதுவுமில்லை, ஏனெனில் அது அந்த ஆகாரத்தை தின்னாது (உ,ஊ), ஏனெனில் அதற்கான பசி (appetite) அதற்கு கிடையாது.

50, அப்படித்தான் ஒரு உண்மையான கிறிஸ்தவனும் இருக்கிறான். ஒரு உண்மையான கிறிஸ்தவன் பேரில் எந்த பாவமும் எண்ணப்படுவதில்லை யென்று உங்களுக்குத் தெரியுமா? ''எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான்' என்று தாவீது கூறியுள்ளாள் (சங். 32:2). நீங்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால்

கழுவப்படும்போது (பாவனை விசுவா சத்தின் மூலம் அல்ல, ஆனால் உண்மை யில் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தி னால்), நீங்கள் செய்த எந்த பாவத்தையும் தேவன் உங்கள் கணக்கில் எடுப்பதில்லை. ஏனெனில் நீங்கள் இரத்தத்தின்கீழ் இருக்கி றீர்கள்; அவர் அதைக் காண்பதில்லை. இரத்தம் தோய்ந்த பலி ஒன்றுள்ளது. உங்களை அவர். காணும் ஒரேவிதம், உலகத்தோற்றத்துக்கு முன்னால் உங்கள் பெயரை ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதின போது உங்களை எவ்வாறு கண்டாரோ, அதே விதமாக, அப்படித் தான் அவர் காணமுடியும். ஏனெனில் நீங்கள் செய்த அனைத்தினின் றும் மீட்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறீர்கள். எனவே உங்க ளில் கசப்பு எதுவும் கிடையாது. உங்களில்

அசுத்தமான பழக்கம் எதுவும் கிடையாது. ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் அதை செய்தது. பாவ நிவாரண பலி அங்கு கிடத்தப்பட்டு, அது உங்களுக்காக காத்திருக்கும்போது, தேவன் பாவத்தை உங்கள் கணக்கில் சுமத்த முடியாது.

51. நீங்கள், 'நல்லது சகோ.பிரான் ஹாமே, நான் விரும்பும் எதையும் செய்ய அது எனக்கு நிறைய இடம் தருகிறது" எனலாம். ஆனால் ஒரு மனிதன் உண்மை யில் இயேசு அவனுக்காக செய்துள்ளதை கண்ட பின்பும், அவருக்கு விரோதமாக எதையாகிலும் செய்வானானால், அவன் "கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை யென்று அது காண்பிக்கிறது.

52. என் மனைவி பின்னால் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அவள் எனக்கு பத்து வயது இளையவள். ஆனால் அவளுக்கு

என் னைப்போல் தலை நரைத்துள்ளது. அதற்கு காரணம் என்ன வெனில், அவள் எனக்கும் வெளிப்புற உலகிற்கும் இடையே நின்று வந்திருக்கிறாள். நான் வெளிநாடு செல்லும்போது, என் குடும்பத்தினரை என்னைச் சுற்றிலும் கூட்டி, ''திருமதி பிரான்ஹாமே. இங்கு பார். நீ திருமதி பிரான்ஹாம் என்பதை உணர விரும்புகிறாய். நான் வெளிநாடு சென்றிருக்கும் போது, என்னைத் தவிர வேறே கணவர்கள் உனக்கு உண்டாயிருக்க வேண்டாம். வேறு எந்த மனிதனைப் பார்த்தும் கண்ணை சிமிட்டாதே. வேறு யாருடனும் சல்லாபம் செய்யாதே. அப்படி செய்தால். நான் திரும்பி வரும்போது, உன்னை விவாகரத்து செய்து விடுவேன்'' என்று கூறுவது ஒரு நல்ல குடும்ப வாழ்க்கைக்கு தகுதியாயிருக்குமல்லவா?

53. அவளும் என்னை நோக்கி, 'இப்பொழுது. என் நல்ல மனிதரே. நானும் உம்மிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன். நீர் வெளிநாட்டில் உள்ள பொழுது, வேறெந்த பெண்ணுடனும் தொடர்பு கொள்ளக்கூடாது. நீர் இதை, அதை செய்யக்கூடாது. அப்படி செய்தால், நீர் வீடு திரும்பும்போது, உம்மை விவாகரத்து செய்து விட்டதாக எண்ணிக் கொள்ளும்." என்பாள்.

54. அது மிகவும் அன்புள்ள குடும்ப மாக இருக்கும் அல்லவா? பாருங்கள்? நான் உண்மையில் அவளை நேசித்தால்..... நான் வழுக்கிப்போய் தவறு ஏதாகிலும் செய்ய நேரிட்டால், அவள் என்னை மன்னித்து விடுவாள் என்னும் நம்பிக்கை எனக்குண்டு. ஏனெனில் அவள் என்னை நேசிக்கிறாள், அவ்வாறே அவள் தவறு செய்ய நேரிட்டால், அவளை நான்

நேசிக்கும் காரணத்தால் அவளை நிச்சயமாக மன்னித்து விடுவேன். நான் அவளை அவ்வாறு நேசிக்கும் வரைக்கும், அவளுக்கு கவலையே இல்லை. அவள் என்னை மன்னித்து விடுவாள் என்றாலும், அவளை நான் எக்காரணத்தைக் கொண்டும் புண்படுத்த மாட்டேன். அப்படி செய்ய நேரிட்டால். நான் உலகிலேயே மிகப் பெரிய குற்றவாளி என்னும் உணர்வு எனக்குண்டாகி, அவளை சந்திக்கும் மாத்திரத்தில் இதைக் குறித்து அவளிடம் கூற துடியாய் துடித்துக் கொண்டிருப்பேன், ஏனெனில் அவளை நான் நேசிக்கிறேன். நல்லது. அது....மாமிசப் பிரகாரமான அப்படிப்பட்ட அன்பினால் அவளை நான் அவ்வாறு நேசித்தால் இயேசு கிறிஸ்துவின் பேரிலுள்ள என் தெய்வீக அன்பு எப்படிப்பட்டதாயிருக்கும்?

55. நான் ஒரு சிகரெட் புகைக்க நேரிட்டால் - அப்படி என் வாழ்க்கையில் நான் செய்ததே கிடையாது; அப்படி நான் செய்தாலும், அவர் என்னை மன்னித்து விடக்கூடும். என் வாழ்க்கையில் நான் மது அருந்தினது கிடையாது; அப்படி நான் செய்தாலும், அவர் என்னை மன்னித்து விடுவாரென்று விசுவாசிக்கிறேன். ஆனால் நான் அவரை மிகவும் அதிகமாக நேசிப்ப தால் (தேவனே, எனக்குதவி செய்யும்) அப்படிப்பட்ட ஒன்றையும் நான் செய்ய விரும்புவதில்லை; பாருங்கள், ஏனெனில் அவரை நான் நேசிக்கிறேன். அந்த ஆவல் என்னை விட்டுப் போய் விட்டது. அவர் என்னை காகத்திலிருந்து புறாவாக மாற்றிய போது, அது வித்தியாசத்தை உண்டு பண்ணி, அந்த பசி என்னை விட்டுப் போய் விட்டது. அதை நான் செய்ய நோக்கமுடையவனாயிராதபடியால்,

பாவம் என் கணக்கில் எண்ணப்படுவ தில்லை. அதை செய்ய வேண்டுமென்பது எனக்குள் இல்லவே இல்லை.

56. புறாவைக் குறித்து வேறொரு பெரிய காரியம். அது ஒரு விசித்திரமான பறவை. நீங்கள் எல்லா பறவைகளையும் கண்டதுண்டா ..

57, எனக்குப் பிரியமான பறவைகளில் ஒன்று 'ராபின்' (robin) என்னும் பறவை. பையன்களாகிய நீங்கள் என ராபின் களை சுடுவதை விட்டு விடுங்கள். அதை நீங்கள் செய்ய வேண்டாம். அதற்கு சிவந்த மார்பு எப்படிக் கிடைத்தது தெரியுமா? ஒரு நாள் ஒரு மனிதர் சிலுவையில் மரித்துக் கொண்டிருந்தார். யாரும் அவருக்கு உதவி செய்யவில்லை. தேவனும் அவரைக் கைவிட்டு, அவர் மரித்துக் கொண்டிருந் தார். அவருடைய கைகளும் பாதங்களும்

ஆணிகளால் கடாவப்பட்டிருந்தன, அவருடைய விலாவிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. அவருடைய சிரசில் முட்கிரீடம் சூடப்பட்டிருந்தது. அவருடைய முகத்தில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அப்பொழுது பழுப்பு நிறமுள்ள ஒரு சிறு பறவை அந்த வழியாக பறந்து வந்தது. இது அந்த காட்சியைக் கண்டது... அது இதுவரை கண்டதிலேயே மிகவும் பரிதாபமான காட்சி என்று எண்ணினது. அது சிறு பறவை என்று அறிந்திருந்தது. ஆயினும் அவருடைய கைகளில் கடாவப்பட்டிருந்த கொடூர பெரிய ரோம ஆணிகளை அது கண்டபோது அங்கு பறந்து சென்று தன் சிறிய அலகினால் அந்த ஆணிகளை வெளியே இழுக்க முயன்றது. அப்பொழுது அதன் மார்பில் இரத்தம் படிந்து அன்று முதல் அது சிகப்பாயுள்ளது. என்

மார்பிலும் அவருடைய இரத்தம் கேடய மாக படிந்து, அவரை நான் சந்திக்கும் போது அது என்னை பாதுகாக்க வேண்டு மென்று விரும்புகிறேன். எனக்கு அந்த சிறிய ராபினைப் பிடிக்கும்.

58. உங்களுக்குத் தெரியுமா. சிறு ராபின் பறவை குளிக்க வேண்டும். ஆனால் புறா குளிக்க வேண்டிய அவசிய மில்லை; இல்லவே இல்லை. அதனுள் உள்ள ஒரு விதமான எண்ணெய் அதை எண்ணெயிட்டு உள்ளும் புறமும் சுத்தமாக வைக்கிறது. உங்களுக்கு அது தெரியுமா? புறாவுக்கு அந்த எண்ணெய் உண்டு. புறா தனக்குத் தானே எண்ணெயிட்டுக் கொள் கிறது. நீங்கள் புறாவை எப்பொழுதாவது கையிலெடுத்து அதன் மேலுள்ள மணத்தை முகர்ந்ததுண்டா? அது அதனுள் உண்டா கும் எண்ணெய். அதன் உடலில் எண் ணெய் சுரபி உள்ளது. அது வெளிப்புறத்

திலுள்ள இறகுகளை எப்பொழுதும் சுத்த மாக வைத்துள்ளது, அது உள்ளும் புறமும் சுத்தமாயுள்ளது. அது உண்மை. அது அற்புதமான சிறு பறவை.



ஆனால் அவன் உன்னை குட்டை
கால்சட்டை அணியவும், தலை
மயிரை கத்தரிக்கவும், மற்ற
காரியங்களைச் செய்யவும்,
தேவபக்தியற்ற இடங்களுக்கு
செல்லவும் கட்டாயப்படுத்தினால்,
முதலாவதாக நீ தேவனுடைய
ராஜ்யத்தையும் அவருடைய
நீதியையும் தேடு. அப்படிப்பட்ட ஒரு
மனிதனுக்கு நீ கட்டுப்பட்டவள்
அல்ல.

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: கேள்விகளும் பதில்களும், ஆகஸ்டு 23, 1964 மாலை

285. **மேலும், சகோ.பிரான்ஹாமே, ஒரு ஸ்திரீ தன் புருஷனுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதை நான் விசுவாசிக்கிறேன். ஆனால் கிறிஸ்தவ ஸ்திரீ ஒருத்திக்கு, உங்கள் ஆராதனைகள் ஒன்றுக்கும் கூட வராத பாவியான புருஷன் ஒருவன் இருந்து, அவன் மனைவியிடம் தலை மயிரைக் கத்தரித்துக் கொள்ளவும், குட்டை கால் சட்டை அணிந்து கொள்ளவும், தேவ பக்தியற்ற இடங்களுக்கு செல்லவும் கட்டாயப்படுத்தினால், அந்த ஸ்திரீ இந்த மனிதனுக்கு அவ்வழியில் கட்டுப்பட்டிருக்க வேண்டுமா? தயவு கூர்ந்து இதை இன்னும் தெளிவாக**

**விளக்குங்கள், ஏனெனில் இது அடிக்கடி கேட்கப்படுகின்ற ஒரு கேள்வியாகும்.**

78. இப்பொழுது, சகோதரியே, அப்படிப்பட்ட ஒருவனுக்கு நீ கீழ்ப்படிய வேண்டியதில்லை. இல்லவே இல்லை. இந்தக் காரணத்திற்காக, நீ எல்லாவற்றையும் விட்டு தேவனிடம் இசைந்திருக்க வேண்டும்.

இப்பொழுது, காரியம் என்னவெனில்... அந்த மனிதன் உன்னுடன் வாழ விரும்பி, நீ கிறிஸ்தவளாக இருக்க சம்மதித்தால்....

**ஆனால் அவன் உன்னை குட்டை கால்சட்டை அணியவும், தலை மயிரை கத்தரிக்கவும், மற்ற காரியங்களைச் செய்யவும், தேவபக்தியற்ற இடங்களுக்கு செல்லவும் கட்டாயப்படுத்தினால், முதலாவதாக நீ தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய**

**நீதியையும் தேடு. அப்படிப்பட்ட ஒரு மனித னுக்கு நீ கட்டுப்பட்டவள் அல்ல.** வேதம் என்ன கூறுகிறதென்றால், "அவளும் அவ னும் ஒன்றாக வாழ திருப்தி கொண்டால், அவர்கள்...."

இப்பொழுது, அந்த வேத வசனத்தை நான் குறித்து வைக்கவில்லை, ஏனெனில் சில நிமிடங்களுக்கு முன்புதான் இந்தக் கேள்வியை நான் கையிலெடுத்தேன். இப்பொழுது நான் ஒன்றை கையிலெடுக் கிறேன், எனக்கு நேரமில்லாமல் போய் விடுகிறது....

79. பவுல் என்ன சொல்லியிருக்கிறான் என்றால், அவிசுவாசியான ஒரு புருஷ னுக்கு விசுவாசியான ஒரு மனைவி இருந்து, அவன் தேவனுக்கு விரோதமான காரியங்களைச் செய்யத் தூண்டாமல், அவளுடன் வாழ விரும்பினால்... "இனிய

வளே. நீ போய் வா, உனக்கு சபைக்கு போக வேண்டுமென்றால் போ, ஆனால் நான் வரமாட்டேன், அதில் எனக்கு விசுவாசம் இல்லை; அதற்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. நீ போய் வா". ஆனால் அவன், "நீ போகக்கூடாது" என்றால், அது வித்தியாசமானது. அதற்கு நீ கட்டுப்பட்டிருக்க வேண்டிய அவசிய மில்லை. தேவனுக்கென்று எல்லாவற்றை யும் விட்டு பிரிந்து விடு.



# சகோ. பிரான்ஹாமே, தொலைகாட்சி உலகத்துக்கே ஒரு சாபம் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: பரிசுத்த ஆவியின் பேரில் கேள்விகளும் பதில்களும், டிசம்பர் 19, 1959

**சகோ. பிரான்ஹாமே, தொலைகாட்சி உலகத்துக்கே ஒரு சாபம் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்?**

87. நல்லது, அதை எழுதினவர் யாரா யிருப்பினும், நான் உங்களுடன் இணங்கு கிறேன். அவர்கள் அதை உலகிற்கு சாபமாக்கிவிட்டனர், அது உலகிற்கு ஆசீர் வாதமாக இருந்திருக்ககூடும், ஆனால் அவர்களோ அதை சாபமாக்கி விட்டனர்.

**என் அருமை மக்களே, அப்படிப்பட்ட ஒன்றை நீங்கள் எந்தவகையில் நோக்கு**

**கிறீர்கள் என்பதை அது பொறுத்தது, தொலைகாட்சி சாபமாகக் கருதப்படுமானால், செய்திதாளும் சாபமே, வானோலியும் சாபமே, அநேகமுறை தொலைபேசியும் சாபமாக உள்ளது.** பாருங்கள், பாருங்கள், பாருங்கள், பாருங்கள்?

***நீங்கள் அதை எவ்விதமாக செய்து விடுகிறீர்கள் என்பதை அனுசரித்து அது உள்ளது.***

அன்றிரவு அந்த சகோதரன் கூறின விதமாக, தொலைக்காட்சியில் இப்பொழுது சுவிசேஷ நிகழ்ச்சிகளே இருப்பதில்லை. ஏனெனில் அதற்கு அதிக பணம் தேவைப்படுகிறது. முழு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஒரு எளிய போதகருக்கு தொலைகாட்சியில் ஒரு நிகழ்ச்சியைத் தர இயலாது. எனவே... அன்றிரவு சகோதரன் இங்கு கூறினாரென்று நினைக்கிறேன்,

அல்லது வேறெங்கோ. அவர் ''உங்கள் வானோலிப்பெட்டியின் மேலுள்ள தூசைத் துடைத்துவிட்டு அதை மூலையிலிருந்து கொண்டு வந்து சுவிசேஷ நிகழ்ச்சிகளைக் கேளுங்கள்'' என்றார். அது உண்மை.

88. ஆனால் அன்பார்ந்த நபரே, நீங்கள் யாராயிருந்தாலும் உங்களுடன் நான் நிச்சயம் இணங்குகிறேன். அது மானிட வர்க்கத்துக்கே மிகவும் வெறுக்கப்படத்தக்க ஒன்றாக உள்ளது.

அரசாங்கத்துக்கு வரிகளாக செல்ல வேண்டிய பணத்தை அவர்கள் எடுத்து, சிகரெட்டுகள் விஸ்கி போன்றவைகளை விளம்பரப்படுத்துவதற்காக நிகழ்ச்சிகளை நடத்தி, அரசாங்க வரிகளிலிருந்து சலுகை பெற்று, அதன் பிறகு அவர்கள் சிறு தொகையைப் பெற, போதகர்களை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்கின்றனர்.

நான் உங்களுடன் இணங்குகிறேன். அது மிகவும் பயங்கரமான ஒன்று...

**நீங்கள் அதில் காணும் நிகழ்ச்சி என்னவென்பதைப் பொறுத்தது.** இந்த கேள்வியைக் கேட்டது சகோதரன் அல்லது சகோதரி யாராயிருப்பினும் உங்களுக்கு என் நன்றி.



# மரியாள் பொரிக்கும் கருவி மாத்திரமே



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: ஒன்றாயிருத்தல், பிப்ரவரி 11, 1962

79. அன்றொரு நாள் நான் நின்று கொண்டு பிரசங்கம் செய்து கொண்டிருந்த போது கூட்டத்தில் சில கத்தோலிக்கர்கள் இருந்தனர். அப்பொழுது நான், "கத்தோலிக்கரே, நீங்கள் இயேசுவை, அதாவது மரியாளை 'தேவனுடைய தாய்' என்று அழைக்கிறீர்களே. தேவன் நித்தியமானவராயிருக்க, அவருக்கு எப்படி ஒரு தாய் இருக்க முடியும்? அவருக்கு ஒரு தாய் இருக்க முடியாது. இயேசு மரியாளுடன் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அவர் ஒரு..... அவள் அவரை பொரித்த பொரிக்கும் கருவி (incubator) மாத்திரமே" என்றேன்.

80. நல்லது, அவர்கள் எப்பொழுதும் கொண்டிருந்த கருத்து: நானும் கூட, தேவன் மரியாளை நிழலிட்டு ஒரு இரத்த அணுவை அவளுக்குள் வைத்தார், ஆனால் முட்டை அவளிடமிருந்து வந்தது என்று சில ஆண்டுகளுக்கு முன்பு எண்ணிக் கொண்டிருந்தேன். முட்டை ஸ்திரீயிடமிருந்து வரவேண்டுமானால், அந்த முட்டை குழாயின் வழியாக கர்ப்பப்பைக்கு வருவதற்கு ஒரு உடல் உணர்ச்சி உண்டாக வேண்டும். நீங்கள் தேவனை என்னவாக செய்து விடுகிறீர்கள் என்பதைக் காண்கிறீர்களா? நீங்கள் அவரை உடலுறவு குழப்பத்தில் ஆழ்த்தி விடுகிறீர்கள். இரத்த அணுவை சிருஷ்டித்த தேவன் முட்டையையும் சிருஷ்டித்தார். டாக்டர், ஆண், பெண், இருவரின் தாதுக்களும் இருக்க வேண்டும். அது உண்மை .

81. நல்லது, மரியாள் முட்டையை உற்பத்தி செய்திருந்தால், தாவீது, "என் பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டேன், அவருடைய ஆத்துமாவை பாதாளத்தில் விடேன்" என்று எப்படி கூறியிருக்க முடியும்? ஸ்திரீயின் முட்டை கிறிஸ்துவுக்குள் இருந்திருக்குமானால், உயிர்த்தெழுதலின் போது அந்த நபர் ஒரு பாகத்தை வகித்திருப்பார். ஆனால் அது முழுமையாக தேவனுடைய பாகமாயிருந்தது. தேவன் ஏன் உடலுறவினால் ஒரு நபருக்கு உண்டான பாகத்தை உயிரோடெழுப்பினார்? உயிர்த்தெழுதலின் போது அவருடைய சரீரம் அழிவைக் காண அவர் ஏன் விடவில்லை? ஏனெனில் அவர் பரிசுத்தராயிருந்தார். மரியாளிடமிருந்து முட்டை தோன்றி குழாயின் வழியாக கர்ப்பப் பையை அடைந்து மரியாள் கருத்தரித்தலில் சம்பந்தப்பட்டிருப்பாளா

னால், அவர் எப்படி பரிசுத்தராயிருக்க முடியும்? அந்த முட்டையை அங்கு கொண்டு வருவதற்கு ஒரு உணர்ச்சி உண்டாயிருக்க வேண்டும். அப்பொழுது அந்த ஸ்திரீ ஒரு பாகத்தை .....

82. நல்லது. நீங்கள், "ஒருக்கால் முட்டை ஏற்கனவே கர்ப்பப்பையில் இருந்திருக்க வகையுண்டு" எனலாம். அப்படியானால், இங்கு என்ன நடக்கிற தென்று பாருங்கள், அவர் முழுவதும் தேவன் அல்ல, அவர் மனித சம்பந்தம் கொண்டு பிறந்தவர். அப்படியானால் ஸ்திரீக்கு அதில் ஒரு பாகம் இருந்ததாக ஆகிவிடுகிறது. மரியாளிடமிருந்து தோன் றும் ஒரு முட்டை அவளுடைய தாய், அவளுக்கும் தாய், அவளுக்கும் தாய் ஆகியோரிடமிருந்து புறப்பட்டு வந்து, அதில் மானிடம் கலந்து, மானிட விருப்பம் கொண்டதாயிருக்கும். எனவே அது

அவ்விதம் இருந்திருக்க முடியாது. இல்லை, ஐயா! நான், "அவர்... அவள் ஒரு பொரிக்கும் கருவி மாத்திரமே” என்றேன்.

83. ஒரு கழுகு இடும் முட்டையை நீங்கள் கோழியின் கீழ் வைத்து அடை காக்க வைப்பது போன்றது. கோழி அதை பொரிக்கச் செய்யும். அது ஒரு பொரிக்கும் கருவி மாத்திரமே. அந்த கழுகுக் குஞ்சுக் குள் கோழியின் ஒரு அணுவும் கூட கிடையாது. இல்லை, ஐயா . கோழி ஒரு.... ஒரு பறவையின் முட்டையின் மேல் ஒரு நாய் குட்டியைக் கட்டி உட்கார வைத்தால், அது ஒரு பறவையை பொரிக்கும் - நாய்குட்டி அப்படி செய்யும். அதன் சரீரத்திலுள்ள வெப்பம் முட்டையைப் பொரிக்கச் செய்கிறது.

84. இயேசுவின் விஷயத்திலும் அவ்விதமே. மரியாள் பொரிக்கும் கருவி

மாத்திரமே. தேவன் மற்ற ஸ்திரீகளைப் போல இவளையும் உபயோகித்தார். அவள் ஒரு கன்னிகை. இதற்கு முன்பு அவளுக்கு பிள்ளைகள் உண்டாயிருக்க வில்லை. அவர் ஒரு கன்னிகையின் கர்ப்பத்துக்குள் புகுந்தார். ஆனால் சிருஷ்டி கர்த்தராகிய தேவன் முட்டை கிருமி இவ்விரண்டையும் சிருஷ்டித்தார். எனவே அது பரிசுத்தமான கர்ப்பந்தரித்தல் (immaculate conception) .



**அவர்கள் கண்டனத்தைத் தாங்கிக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும். நம்மை யாரும் குற்றப்படுத்தவில்லையென்றால், ஏதோ தவறுள்ளது. உலகம் எப்பொழுதுமே தன்னுடையவர்களை அறிந்துள்ளது.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: தேவனுடைய வார்த்தை அவிசுவாசத்தினின்று முழுவதுமாக பிரிந்து வரும்படி அழைக்கிறது, *ஜனவரி 21, 1964*

17. எண்ணாகமம் 6ம் அதிகாரத்தில் நசரேய அழைப்பு ஒன்றுள்ளதென்றும், அது அவர்களை உலகத்தினின்று தேவனுடைய வார்த்தைக்கு வேறு பிரிக்கிறதென்றும் நாம் காண்கிறோம். அது தான் நசரேய அழைப்பு - பிரித்தெடுக்கப்படுதல்.

18. சிம்சோன் தேவனுக்கென்று நசரேயனாக இருந்தான் என்று காண்கிறோம். அவன் ஒரு அடையாளத்தின் மூலமாக பிரித்தெடுக்கப்பட்டான். அந்த அடையாளம் என்னவெனில், அவன் தலைமயிரை நீளமாக வளரவிட்டு, அதை ஏழு சுருள்களாக (locks) சுருட்ட வேண்டும். அதுவே

பிரித்தெடுக்கப்பட்டதன் அடையாளமா யிருந்து, ஒரு நோக்கத்திற்காக அவன் அழைக்கப்பட்டான் என்பதை எடுத்துக் காண்பித்தது.

19. இதைத் தொடங்க எனக்கு விருப்பமில்லை. ஏனெனில் நான் சில நிமிடங்கள் மாத்திரமே பேசப்போகிறேன் என்று கூறினேன். இன்று நமது சகோதரிகள் வேதத்திற்கு கீழ்ப்படிந்து தலைமயிரை நீளமாக வளரவிட்டிருப்பதைக் காணும் போது, இவர்கள் தேவனைப் பின்பற்ற விரும்புகின்றனர் என்பதற்கு அது நசரேய அடையாளமாகத் திகழ்கின்றது என்று எண்ணுகிறேன். அது மிக வெளிப்படை யான வாக்குமூலம் என்று நானறிவேன். இது உங்களில் பதிய வேண்டும். பாருங்கள்? ஏனெனில் அது உண்மை. தேவன் செய்யக் கூறினதை அவர்கள் செய்கின்றனர். அதற்காக என்ன கிரயம்

செலுத்த வேண்டியிருந்தாலும், உலகம் அதைக் குறித்து என்ன கூறினாலும், பரியாசக்காரரும் குற்றங் கண்டு பிடிப்ப வர்களும் எவ்வளவாக இகழ்ந்தாலும், உலகக் காரியங்களினின்று முழுவதுமாக பிரிந்து தேவனுடைய காரியங்களில் ஈடுபட்டுள்ளவர்களை அது எந்த விதத்தி லும் பாதிக்காது. அவர்கள் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, உலகக் காரியங்களினின்று தங்களை வேறு பிரித்துக் கொள்வார்கள். ஏனெனில் வார்த்தை அவர்களைப் பிரிக்கிறது.

20. அவர்கள் கண்டனத்தைத் தாங்கிக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும். நம்மை யாரும் குற்றப்படுத்தவில்லை யென்றால், ஏதோ தவறுள்ளது. உலகம் எப்பொழுதுமே தன்னுடையவர்களை அறிந்துள்ளது. நான் கூறினவிதமாக..... இதை ஞாபகம் கொள்ளுங்கள், தேவ

னுடைய வார்த்தையின் நிமித்தம் நாம் குற்றஞ்சாட்டப்படுதல் என்பது, அவருடைய கிருபையில் நாம் வளர ஏதுவாயுள்ள வேதனையே. நீங்கள் கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டுமென்று ..... கிறிஸ்தவர்களைப்போல் வாழ, தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய-உங்களைப் பிரித்துக்கொண்டீர்கள் என்பதை அது காண்பிக்கிறது. அதுவே நீங்கள் செய்யும் நசரேயப் பொருத்தனை உலகக் காரியங்களினின்று உங்களைப் பிரித்தெடுக்கும் தேவனுடைய அழைப்பு.

21. தேவனுடைய ஆவியால், பிறந்த ஒவ்வொரு மனிதனும், ஸ்திரீயும், ஒவ்வொரு பையனும் பெண்ணும் கர்த்தருக்கென்று நசரேயனாக உள்ளனர் என்பதை இன்றிரவு நான் நம்புகிறேன். ஏனெனில் அவர்கள் உலகக் கவலைகளினின்றும்,

உலகம் கூறும் அனைத்தினின்றும் தங்களை வேறுபிரித்துள்ளனர்.

22. சிறந்த பள்ளிகள் உள்ள இப்பட்டினத்தில் நீங்கள் வசிக்கின்றீர்கள். நமது நாடு உயர் தர கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதை நாம் காண்கிறோம். (அது நல்லது தான். அதைக் குறித்து ஒன்றும் கூறுவதற்கில்லை). ஆனால் கல்வி உங்களுக்கு இரட்சிப்பை அளிக்கமாட்டாது. ஒரு விஞ்ஞானி ஒரு கோதுமை மணியை உடைத்து அதில் எத்தனை இரசாயனப் பொருட்கள் உள்ளன என்று உங்களிடம் கூற முடியும். ஆனால் அதிலுள்ள ஜீவனை அவனால் கண்டு பிடிக்க இயலாது. கல்வி உங்களுக்கு கணிதம், வரலாறு போன்றவைகளைக் கற்பிக்க முடியும். ஆனால் அது உங்களுக்கு ஜீவனையளிக்க முடியாது. உங்கள் கல்வி அதை செய்ய முடியாது.

உங்களுக்கு ஜீவனைக் கொண்டுவர தேவன் ஒரே ஒரு முறையைத் தான் கையாளுகிறார். அதாவது, நீங்கள் உலக காரியங்களினின்றும் உலகக் கவலைகளி னின்றும் உங்களை வேறுபிரித்துக் கொண்டு, தேவனுடைய வாக்குத்தத்தத்தை இறுகப் பற்றிக் கொள்ளும்போது.




வாத்துக்கள் தங்கள் வழிகாட்டியை
அறிந்துள்ளன. ஆனால் சபையோ
அதன் வழிகாட்டியை அறிந்து
கொள்ளாமல் இருக்கின்றது.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: ஒரு வழிகாட்டி, *அக்டோபர் 14, 1962*

72. காட்டு வாத்துக்கள் தெற்கு நோக்கிச் செல்வதை நீங்கள் கண்டிருக்கிறீர்களா?

அந்த வாத்து எங்கோ ஓரிடத்தில் ஒரு குட்டையில் பிறக்கின்றது. அதற்கு கிழக்கு, மேற்கு வடக்கு தெற்கு திசை எதுவென்று தெரியாது.

கனடாவின் மலைகளின் நடுவிலுள்ள அந்த குளத்தை தவிர வேறொன்றும் அதற்கு தெரியாது. அந்த குளத்தை விட்டு அது வெளியே வந்ததும் கிடையாது.

ஆனால் அது ஒரு தலைவனாக பிறந்துள்ளது.

ஓரிரவு மலைகளின் உச்சயில் மூடுபனி இறங்குகிறது. என்ன நேரிடுகிறது? குளிர்ந்த காற்று அங்கிருந்து வீசத் தொடங்குகின்றது.

அப்பொழுது மற்ற வாத்துக்கள் குளி ரிய நடுங்கத் தொடங்குகின்றன. அவை, "அம்மா, இதன் அர்த்தம் என்ன?" என்று இந்த வாத்திடம் கேட்கின்றன.

பாருங்கள், இதற்கு முன்பு இந்த வாத்து குளிர்ந்த சீதோஷ்ண நிலையை உணர்ந்த தேயில்லை. அது சுற்றும் முற்றும் பார்க் கிறது. அது குளத்தின் ஓரம் பனியாக உறைகிறதை காண்கிறது. குளத்தில் பனிக் கட்டி தோன்றுகிறது. அதற்கு ஒன்றுமே தெரியவில்லை.

ஆனால் திடீரென்று ... அது வாத் துக்களின் கூட்டத்திற்கு வழிகாட்டியாகப்

பிறந்துள்ளது. அதற்கு திடீரென்று ஏதோ ஒரு உணர்ச்சி தோன்றுகிறது.

அப்பொழுது அது குளத்தின் நடுவில் குதிக்கக் தொடங்கு கின்றது. நீங்கள் அதை என்ன வேண்டுமானாலும் அழைக்கலாம். நாங்கள் அதை தேவனளித்த' 'ஊக்கம்' (inspiration) என்றழைக்கிறோம். நீங்கள் வேண்டுமானால் அதை உள்ளுணர்வு' (instinct) என்றழைக்கலாம், அது குளத்தின் நடுவில் குதித்து, தன் சிறு அலகை தூக்கி, ''ஹாங்க் - ஹாங்க. ஹாங் - ஹாங்க'' என்று சத்தமிடத் தொடங்குகிறது. அப்பொழுது குளத்திலுள்ள எல்லா வாத்துக்களும் அதனிடம் வருகின்றன. ஏன்? அது இடும் சத்தத்திலிருந்து தங்கள் தலைவனை அறிந்து கொள்கின்றன.

73. "எக்காளம் விளங்காத சத்தமிட் டால், எவன் யுத்தத்திற்கு ஆயத்தம்

பண்ணுவான்?" (1 கொரி, 14:8). அது உண்மை.

74. அது போன்று, அந்த வாத்தும் விளங்காத சத்தமிட்டிருந்தால், எந்த வாத்து பறப்பதற்கு ஆயத்தப்பட்டிருக் கும்? அந்த வாத்து தன் அலகைத் தூக்கி, ''ஹாங்க் - ஹாங்க் ஹாங்க் - ஹாங்க'' என்று சத்த மிடும் போது, மற்றெல்லா வாத்துக்களும் அதனிடம் வந்து, "ஹாங்க் - ஹாங்க் ஹாங் - ஹாங்க'' என்று சத்தமிடுகின்றன.

அவைகளுக்கு அங்கே யூபிலி மகிழ்ச்சி உண்டாகின்றது. அவை குளத்தின் நடுவில் கர்ணம் அடித்து அடித்து மகிழ்கின்றன.


சிறிது நேரத்துக்குப் பின்பு, அதற்குள் ஒரு அசைவு உணர்வு தோன்றுகின்றது. அது புறப்பட்டுச் செல்ல வேண்டும்.

அது செட்டைகளை கீழே தாழ்த்தி, குளத்திலிருந்து ஆகாயத்தில் பறந்து, நான்கைந்து வட்டமடிக்கின்றது - பின்பு லூயிசியானாவுக்கு அது நேராக பறந்து செல்கின்றது.

அதைப் பின் தொடர்ந்து எல்லா வாத்துக்களும் "ஹாங்க் - ஹாங்க'' என்று சத்தமிட்டு பறந்து செல்கின்றன.

ஏன்? அது ஒரு வழிகாட்டி! ஆமென்! வாத்துக்கள் தங்கள் வழிகாட்டியை அறிந்துள்ளன. ஆனால் சபையோ அதன் வழிகாட்டியை அறிந்து கொள்ளாமல் இருக்கின்றது. ஆம், அந்த வாத்துக்கு என்ன செய்ய வேண்டுமென்று தெரியும்.







அவருடைய நீதியின்
வஸ்திரத்தினால் நான்
சுற்றப்பட்டிருக்கிறேன், என் சொந்த
வஸ்திரத்தினாலல்ல. என்னிடம்
ஒன்றுமில்லை. என் வஸ்திரம்
அழுக்கான கந்தையாயிருக்கிறது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: *ஈஸ்டர் முத்திரை, ஏப்ரல் 10, 1965 காலை*

278. இப்பொழுது நான் வயோதிபன். ஆனால் அது அநேக ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது. நான் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அந்த நாளில், எனக்கு நேர்ந்த அந்த பெரும் போராட்டத்தில்... என் மனைவி மரிப்பதை நான் கண்டேன். அவளுடைய உயிருக்காக நான் தேவ னிடம் மன்றாடினேன். ''தெருக்களின் மூலையில் நின்று பிரசங்கித்து, வியாதி யஸ்தர்களுக்காக ஜெபம் செய்வதைத் தவிர, வேறென்ன நான் செய்தேன்?'' என்று ஆண்டவரிடம் முறையிட்டேன். அப்பொழுது சாத்தான், "உன் ஜெபத்திற்கு அவர் பதிலளிக்கமாட்டார்' என்றான். அவள் மரிப்பதை நான் கண்டேன்.

ஆனால் அவளுக்குள் உயிர்த்தெழுதலின் வல்லமை இருந்தது என்று நானறிவேன். அந்த எலும்புகள் மறுபடியும் உயிர்த் தெழும்.

279. என் சிறு குழந்தை கட்டிலில் படுத்துக் கிடந்தது. அதன் மேல் என் கைகளை வைத்து, "தேவனே, அதை எடுத்துக்கொள்ளாதேயும்" என்று மன்றாடி னேன். அவர் திரையினால் தம்மை மறைத்துக் கொண்டு, "இனி ஒரு போதும் உனக்கு செவி கொடுக்க மாட்டேன்'' என்று கூறினதுபோல் காணப்பட்டது. சாத்தானும், "பார்த்தாயா?'' என்றான். தேவன் இல்லை யென்று அவனால் என்னிடம் கூறமுடிய வில்லை. ஏனெனில் அவர் இருக்கிறார் என்று எனக்குத் தெரியும். அனால் அவன், 'அவர் உன்னை நேசிக்கவில்லை, உனக்காக கவலை கொள்ளவில்லை'' என்று சொல்லி, அதற்கான காரணங்களைக்

காட்டினான். அவன், ''நீ வாலிபன், உனக்கு 20 வயது தான் ஆகிறது. உன் மனைவி மரித்து சவக்கிடங்கில் கிடக்கிறாள். உன் குழந்தையும் மரிக்கப்போகின்றது, அப்படி யிருக்க நீ என்னமோ அவர் மகத்தான சுகமளிப்பவர் என்று கூறுகிறாய். அவர் என்ன செய்கிறார் என்று பார்த்தாயா? அவர் ஒரு வார்த்தை சொன்னால் போதும். அவர் பேசவேண்டிய அவசியமும் கூட கிடையாது. அவர் கீழே நோக்கிப் பார்த்து தலையசைத்தால் மாத்திரம் போதும். அப்பொழுது குழந்தை சுகமடையும். ஆனால் பார், அவர் உன்னை நேசிக்க வில்லை, உன் மேல் அக்கறை கொள்ள வில்லை, உன் குழந்தை சாகும்படி செய் கிறார். இந்த அந்தகார நேரத்தில்" உன் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்க மறுக்கி றார்' என்றான்.

280. அவன் கூறின அனைத்தும் முற்றிலும் உண்மையே. அவன், " நீ என்ன தவறு செய்தாய்? நாள் முழுவதும் நீ. அவருக்காக. வேலை செய்து, உன்னால் நிற்கவும் கூட சக்தியில்லாமல் களைத்துப் போகிறாய். பிறகு இரவு பன்னிரண்டு, ஒரு மணி வரைக்கும் தெரு மூலைகளில் நின்று பிரசங்கம் செய்து. ஆஸ்பத்திரியில் வியாதி யஸ்தர்களை சந்திக்கிறாய். நீ திரும்பி வந்து நாற்காலியில் அமர்ந்து கொண்டு, ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் தூங்கி விட்டு, பின்பு வேலைக்குச் சென்று விடுகிறாய். அடுத்த இரவும் அதையே செய்கிறாய். ஒவ்வொரு நண் பனும் வாலிபனும், வாலிபப்பெண்ணும், உன்னைப் பைத்தியக்காரன் என்கின்றனர். உன்னை நீ முட்டாளாக்கிக் கொள்கிறாய் என்பதை உன்னால் அறிந்துகொள்ள முடியவில்லையா?' என்றான்.

281. அவன் கூறினதை ஆமோதிக்க நான் ஆயத்தமானபோது, எனக்குள் இருந்த உயிர்ப்பிக்கும் வல்லமை, "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்' என்றுரைத்தது.

என் நம்பிக்கையெல்லாம் போன பின்பும்

அவரே என் நம்பிக்கையும் உறைவிடமுமாய் இருக்கிறார்

கிறிஸ்து என்னும் திடமான பாறையின் மேல் நிற்கிறேன்

வேறெந்த அஸ்திபாரமும் அமிழ்ந்து போகும் மணலே


அவர் எக்காள தொனியுடன் வரும் போது

அவருக்குள் இருப்பதாக அப்பொழுது காணப்படுவேனாக

282. அவருடைய நீதியின் வஸ்திரத்தினால் நான் சுற்றப்பட்டிருக்கிறேன், என் சொந்த வஸ்திரத்தினாலல்ல. என்னிடம் ஒன்றுமில்லை. என் வஸ்திரம் அழுக்கான கந்தையாயிருக்கிறது.

283. நான் பிரசங்கம் செய்தேன் என்னும் காரணத்தால் பரலோகத்திற்கு செல்ல முயல்வதை நான் விரும்பவில்லை. தரிசனங்கள் கண்டேன் என்பதனால் பரலோகம் செல்ல முயல்வதை நான் விரும்பவில்லை. அவருடைய கிருபையை என் இருதயத்தில் கொண்டுள்ளபடியால் நான் பரலோகம் செல்கிறேன் - அவர் என் மேல் பாராட்டும் கிருபை. அதன் காரணமாகத்தான் நான் அங்கு செல்கிறேன். நாம்

எல்லோருமே அப்படித்தான் அங்கு செல்கிறோம்.




2 நாளாகமம் 15:2
... நீங்கள் கர்த்தரோடிருந்தால்,
அவர் உங்களோடிருப்பார்;
நீங்கள் அவரைத் தேடினால்
உங்களுக்கு வெளிப்படுவார்;
அவரை விட்டீர்களேயாகில், அவர்
உங்களை விட்டுவிடுவார்.

# கழுகின் சத்தம்

## நவம்பர் 29, 2023




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து